# மாஸ்லோவின் தேவைக்கட்டமைப்பில் சுய முழுமைத் தேவைகள் ஒரு நோக்கு

**M.A. Aboobucker**
Department of Philosophy & Psychology
University of Peradeniya
mufizal@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இவ் ஆய்வானது மாஸ்லோவின் தேவைக் கோட்பாட்டை விளக்குவதுடன் அதில் அவர் குறிப்பிடுகின்ற சுய முழுமைத் தேவை தொடர்பான விடயங்களை சிறப்பாக ஆராயமுற்படுகின்றது. தேவை தொடர்பான கோட்பாடுகளும் அவற்றின் நடைமுறைப் பிரயோகங்களும் மெய்யியல் மற்றும் உளவியல் பாடப்பரப்பில் முதன்மையாக நோக்கப்படுகின்ற விடயங்களில் ஒன்றாகும். சமூகநலத்திட்டங்களிலும் இவற்றின் அவசியம் உணரப்பட்டு வலியுறுத்தப்படுகினறது. மாஸ்லோ தனது தேவைக் கோட்பாட்டினை தூண்டுதல் கோட்பாட்டின் ஒருபகுதியாக குறிப்பிடுகின்றார். தேவையும் தூண்டுதலும் மனிதநல விருத்தியின் முக்கிய பகுதிகளாக உளவியலாளர்களினால் நோக்கப்படுகின்றது. மாஸ்லோ தனது கோட்பாட்டை மனிதத் தேவைக் கட்டமைப்போடு இணைத்து விளக்குகின்றார். மனிதர்களது நடத்தையும் வாழ்வும் அவர்களது தேவை மற்றும் நிறைவு என்பனவற்றை வைத்தே தீர்மானிக்கப்படுவதாக அவர் வலியுறுத்துகின்றார். இவ்வாய்வில் மாஸ்லோவின் தேவைகள் தொடர்பான வரையறைகள் மனிதரது முழு நிலையோடு தொடர்புபடுத்தி எவ்வாறு நோக்கப்படுகின்றது அத்துடன் அவற்றின் மூலம் பூரண மனிதர்களை உருவாக்க முடியுமா. மாஸ்லோவினால் முன்வைக்கப்படும் மனித நிறைவுக்கான மாதிரிகள் என்ன அவர் எவ்வாறான தீர்வுகளை முன்வைக்கின்றார் என்பதனையும் அவரால் முன்மொழியப்பட்ட விடயங்களை விவாதிப்பதுடன் அவரால் கவனத்தில் கொள்ளப்படாத தற்கால மனிதர்களின் தேவைகள் மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் என்பனவும் இதில் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வானது கருத்துநிலை பற்றிய ஒன்றாகஅமைகின்றது. இதில் மாஸ்லோவின் கருத்துக்களையும் ஏனையோரின் கருத்துக்களையும் பகுப்பாய்வு மற்றும் விபரண முறைகளுடாக நோக்கப்படுகின்றது. இவரது கோட்பாடு எவ்வாறு முழு நிறைவை பிரதிபலிக்கின்றன என்ற கேள்வியை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளனால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் தொகுப்பாகவும், பகுப்பாகவுமே இதன் முறையியில் அமைகின்றது. இந்தவகையில் மாஸ்லோவின் தேவைக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் சுய முழுமைத் தேவைகளினூடான மனித முழு நிறைவு பற்றிய ஒரு தேடலாகவே இது அமைகின்றது எனலாம்.

***பிரதான சொற்பதங்கள்:*** *மாஸ்லோ, தூண்டுதல், தேவைக்கோட்பாடு, சுய முழுமை.*

## அறிமுகம்

இவ்வாய்வு மாஸ்லோவின் தேவைக்கோட்பாடு தொடர்பான விளக்கத்தை முன்வைப்பதோடு அதில் குறிப்பிடப்படும் சுய முழுமைத் தேவை என்ற எண்ணக்கருவை சிறப்பு அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்றது.
தேவை என்ற எண்ணக்கரு தனிமனித வாழ்க்கையிலும் சமூக மட்டத்திலும் பல்வேறு தொடர்புகளையும் பரிமாணங்களையும் கொண்டுள்ளது. மனிதர்களது தேவைகள் பூரணமாக நிறைவு செய்யப்படாதவிடத்து அவர்கள் தம்மிலிருந்தும் சமூகத்திலிருந்தும் அந்நியமாதல் நிலையை அடைகின்றனர். இது மனிதரின் முழு நிறைவு வளர்ச்சியை நேரடியாகவே பாதிக்கின்றது. மனிதத் தேவைகள் தொடர்பான அடிப்படை அத்தேவையின் பெறுமானத்தைக் கொண்டே அளவிடப்படுகின்றது. தேவையில்லாதவிடத்து எதுவுமே பெறுமதியற்றதாகிவிடுகின்றது. அதேவேளை மனிதர்கள் எப்போதாவது தமது தேவைகள் நிறைவடையச் செய்யப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலும் இருக்கின்றனர்.

மாஸ்லோ தனது தேவைக்கோட்பாட்டை முன்வைத்து அதன் மூலம் மனிதர்களது முழு நிறைவான வாழ்வையும் மனித முன்னேற்றத்தையும் பற்றி செயவலாற்றியவர்களில் முக்கியமானவர். அமெரிக்கச் சூழலில் மனிதர்களினதும் அவர்களது ஆற்றல் மேம்பாடு, சமூக முன்னேற்றம், தனிமனித நிறைவின் அவசியம் என்பனவற்றினூடாக தொழிற் சூழலையும் பொருளாதார நடவடிக்கைகளையும் முனக்னோக்கிக் கொண்டு செல்லத் தூண்டியவர்களில் முக்கியமானவாராவார். மாஸ்லோ மனித நல வாதத்தை முன்வைத்து தமது கொள்கைகளை வாதிட்டார். மனிதர்கள் தேவையுடையவர்கள் அவர்களது ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு முழுமையடையச் செய்யப்பட வேண்டுமென்றால் மனிதத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதற்காக தன்னால் உருவாக்கப்பட்ட மனிதத் தேவைகள் தொடர்பான கட்டமைப்பையும் பரிந்துரைக்கின்றார்.

மாஸ்லோவின் தேவைக்கட்டமைப்பு பிரதானமாக 5 படிமுறைகளைக் கொண்டது. மனிதர்கள் எல்லோரும் தேவைகளால் தூண்டப்படுகின்றனர். அடிப்படைத் தேவைகள் பொதுவானவை. அவை பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னமே உருவாகியது. ஏனைய தேவைகள் மனிதர்களுக்கு ஏற்ப வேறுபட்டாலும் அவை அவர்களை தூண்டுவதற்கு உதவுகின்றன என்பதை அவர் விளக்குகின்றார். மாஸ்லோவின் வகையீட்டின் படி,

1. உயிரியல் மற்றும் உடலியல் தேவைகள்
2. பாதுகாப்புத் துேவைகள்
3. சேர்ந்திருத்தல் மற்றும் அன்புத் தேவைகள்
4. மதிப்புத் தேவைகள்
5. சுய முழுமைத் தேவைகள்

போன்ற தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. மனிதர்கள் தமது முழுமையை உணராதவிடத்து திருப்தியற்றவர்களாக மாறுகின்றனர் இத்தேவை மனித வளர்ரிசியுடன தொடர்புடையது. முழு நிறைவு அடைந்ததும் அனைவரும் அதில் தொடர்ச்சியாக நிலைத்திருக்கவே விரும்புகின்றனர் இந்நிலையிலேயே மனித ஆற்றல் முழுமையாக வெளிப்படுகின்றது மனிதர்கள் உண்மையின் மையத்தை உணர்கின்றனர் அதனூடாக தமது முழு ஆற்றலையும் வெளிப்படுத்துகின்றனர். இவ்வாய்வு மாஸ்லோவின் சுயமுழுமைத் தேவைகள் தொடர்பான விடயங்களையும் அவற்றின் சமூகப்பரிமாணம் மற்றும் தேவை நிறைவு செய்யப்பட்டோரின் தன்மைகள் போன்றவற்றையும் ஆய்வுக்குட்படுத்துகின்றது.

**ஆய்வுப்பிரச்சினை**

மாஸ்லோவின் தேவைக்கட்டமைப்பிலுள்ள சுய முழுமைத் தேவைகளின் நிறைவு மனிதர்களை முழு நிறைவடையச் செய்க்கின்றதா? என்பதை மெய்யியல் மற்றும் உளவியல் பார்வையில் நோக்குவதாகும்.

**ஆய்வின் நோக்கம்**

**பிரதான நோக்கம்**

- மாஸ்லோவின் தேவைக்கட்டமைப்புத் தொடர்பாக விளக்கி அதில் சுய முழுமை நிறைவின் தன்மைகளை வெளிக்கொணர்வதோடு இது தொடர்பாக இதுவரை முன்வைக்கப்படாத மனித நல மெய்யியல் சார் விடயங்களை முன்வைத்தல்.

**துணை நோக்கங்கள்**

- தேவையும் சமூகக் கட்டமைப்பும்

- தனிமனித நிறைவில் தேவையின் பங்கு

**ஆய்வு முறையியல்**

அடிப்படையில் இவ்வாய்வு கருத்து நிலைப்பட்ட விவாதப் பகுப்பாய்வாகக் காணப்படுகின்றது. உய்த்தறி, தொகுத்தறி முறைகளின் உதவியைக் கொண்டு ஆய்வுச் சான்றுகள் பரிசீலிக்கப்பட்டுள்ளன. ஒப்பீட்டுப் பகுப்பாய்வு மற்றும் விளக்கம், விபரண முறைகள் என்பன பயன்படுத்தப்படவுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளுக்கே இங்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மாஸ்லோவினால் எழுதப்பட்ட அவரது நூல்களும் ஏனைய எழுத்தாளர்களால் மாஸ்லோ பற்றி எழுதப்பட்டவைகளும் இதில் பயன்படுத்தப்படுகின்றன.

**முடிவுகள்**

இவ்விமர்சன ரீதியான ஆய்வு மாஸ்லோவின் கருத்துக்களிலுள்ள முக்கியத்துவத்தை விளக்குவது மற்றும் தனிமனித முழு நிறைவு தொடர்பான மெய்யியல் மற்றும் உளவியல் ரீதியான வாதங்களை பரிசீலனை செய்வதுடன் தற்கால உலகில் எவ்வாறான நடைமுறைகளுடன் இக்கருத்துக்களை ஒன்றிணைக்க முடியும் என்பதனையும் கண்டறிய முனைகின்றது. அத்தோடு தனிமனித சமூக சமயத் தொடர்புகள் என்பனவற்றுக்கு அப்பால் வேறுபட்ட ஒரு கருத்து நிறைவான தேவைகள் பூர்த்தியடைந்த மனிதர்களை மாஸ்லோவின் கருத்துக்கள் உருவாக்க முனைகின்றன என்ற முடிவினையும் நோக்கிச் செல்லுதல்.

**பரிந்துரைகள்**

- மாஸ்லோ தனது மனிதநலவாதக் கருத்துக்களை முதலாளித்துவ நாடுகளில் நடைமுறைப்படுத்திக்காட்டினார். அவ்வாறான கருத்துக்கள் ஏனைய நாடுகளிலும் பிரபல்யப்படுத்தப்பட்டு பின்பற்றப்பட ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- மாஸ்லோ முதலாளித்துவ தொழிற் சூழலை மட்டும் கருத்தில் கொள்ளவில்லை மாறாக மனிதனது பூரணவாழ்வு முழு நிறைவு போன்ற மெய்யியல் பிரச்சினை மையங்களைப் பற்றியும் வெளிக்கொணர்ந்த ஒருவர் என்பதை ஏற்பதுடன் சமூகப்பிரச்சினைகளுக்கு மாஸ்லோவின் கருத்துக்களினூடாக தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முயலுதல்.
- சுய முழுமைத் தேவை நிறைவின் மனித நல நோக்கு என்பது வெறுமனே பொருளாதார தொழிற் சமூகம் சார்ந்தது மட்டுமல்ல மாறாக தனிமனிதனுடனும் அவனை முழுநிறைவுடனும் தொடர்பு படுத்தக்கூடியது.
- சுய முழுமையான மனிதர்களால் மட்டுமே நிலையான சமூக அபிவிருத்தியையும் நிரந்தரமான உலகையும் பெற்றுத் தர முடியும்.

**உசாத்துணைகள்**

Buhler, C. Allen M. 1972**.** ***Introduction to Humanistic Psychology.*** Monterey. CA: Brooks

Lowry, R. J. 1973***. A.H Maslow:*** An Intellectual Portrait. Monterey: CA: brooks.

Maslow A.H, 2003. ***Motivation and Personality.*** 3rd edition, Revised by:Robert
………………1965. ***Eupsychian Management,*** New York: Homewood.

............................1971***. Humanistic Psychology: interviews with Maslow***, Murphy and Rogers, Merrill.

Micthell, A.1983. ***The Nine American Life Style,*** New York: Waner Books